# பசுச் செல்வம்

( கோ. கருணாநிதி )

26644



இனியாவது பசுவினம் காக்கப்படுமா ?

30489

MAHARISHI DAYANAND SARASWATI

[library stamp]



Published by :

ARYA SAMAJ (Central) CHENNAI

CHENNAI

# பசுச் செல்வம்

(கோ. கருணாநிதி)

ஓம் நமோ நம : சர்வ சக்தி மதே ஜகதீ ஸ்வராய ||

## முன்னுரை

இந்த்3ரோ விஸ்வஸ்ய ராஜதி |
சன் னோ அஸ்து த்3விபதே3ஸம் சதுஷ் பதே3|
யஜுர் வேதம் - அத்தியாயம் - 36 . மந்திரம் - 8 ||

தனோது சர்வேஸ்வர் உத்தமம் ப3லம் க3வா
- தி3ரக்ஷம் விவித4ம் த3யேரித :|
அஸேஷ விக்4 நானி நிஹத்ய ந:ப்ரபூ : சஹாய காரி
- வி3த்தா4து கோ3ஹிதம்|
யே கோ3சுகம் சம்யகு3ஸந்தி தீபுராஸ்தே -
த4ரம்மஜும் சௌக்யதா த3த3நந்தே |
க்ரூரா - நரா பாபரதா ந யந்தி ப்ரஜ்ஞாவி -
ஹுனா : பஸூஹம் ஸகாஸ் தத் II 2

*இறைவனின் குண கர்ம ஸ்வபாவ கருத்து, ஸ்ருஷ்டி, க்ரமம் முதலியவை காண்பவற்றைச் சான்றாகக்கொண்டு தான் பெற்ற நற்பண்புகளால் நல்வழி நடந்து உலகிற்கு நன்மை செய்பவர்களாகிய ஆன்றோர் பாராட்டத் தக்கவர்கள்.*

இதற்கு மாறாகச் சுய நலத்தோடு இரக்கமற்ற முறையில் உலகிற்குத் தீமை விளைவிப்பவர்கள்மீது வருத்தமே உண்டாகிறது. தமக்கு எத்தனை கஷ்டம் வந்தாலும் (உலகிற்கு) எல்லோருக்கும் நன்மை செய்வதில் உடல், பொருள், ஆவி யாவற்றையும், தியாகம் செய்பவரே, பூஜிக்கத் தக்கவர்கள்.

தமது நன்மைக்காகப் பிறருக்குக் கஷ்டத்தையும், நஷ்டத்தையும் தருவோர் வெறுக்கத் தக்கவர்கள்.

உலகில் இன்ப துன்பங்களை ஒப்புக் கொள்ளாத மனிதனும் உண்டா? தன் தலையை வெட்டும்போது, துன்பமும். அதிலிருந்து காக்கப்படும்போது இன்ப உணர்வும் கொள்ளாத மனிதனும் உண்டா? குற்றமற்ற பிராணிகளை வதை செய்து உடல் வளர்க்கும் செயலை நல்லோர் நிந்திப்பார்களேயானால், எல்லோருக்கும் லாபமும், சுகமும், ஆனந்தமும் உண்டாகாதா?

**சர்வ சக்திமான், ஜகதீஸ்வரனாகிய இறைவன்** உலகில் மனித ஆத்மாவின்மீது, தன் கருணையையும். நீதியையும் அருளட்டும். அதன் மூலமாக மனிதன் கருணையோடும், நீதி நேர்மையோடும், எப்பொழுதும், எல்லோர்க்கும், நன்மை செய்து, சுய நலத்தை விட்டு, பாரபட்ஷம் இல்லாமல் பசு முதலிய பிராணிகளை வதை செய்யாமல், பசுக்களால் பால் முதலிய செல்வங்களைப் பெற்று, விவசாயத் தொழிலில் மேன்மை பெற்று மனித இனம் இன்பம் அடையட்டும்.

இந்தப் புத்தகத்தில் அதிகபட்சமாகவோ, குறைவாகவோ, ஏற்கத் தகாத முறையிலோ எழுதப்பட்

டிருந்தால், இந்தப் புத்தகம் எழுதும் நோக்கம் குறித்து, ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். நாங்கள் எந்த நோக்கத்தோடு இந்தப் புத்தகத்தை எழுதுகிறோமோ அதற்கேற்ப நீங்களும் பொருள் கொள்வீர்கள் என்று நம்புகிறோம்.

இந்தப் புத்தகம், பசு முதலிய பிராணிகள் காக்கப்பட்டு, பசுக்களால் கிடைக்கும் பால், தயிர், மோர். வெண்ணெய், நெய் மேலும் விவசாயம் போன்ற முதலியவைகளை அதிகமாகப் பெற்று, எல்லோரும் நலம் பெறவேண்டி எழுதப்படுகிறது. இறைவனும் இவ்வெண்ணம் நிறைவேற அருள் புரியட்டும்.

**இந்தப் புத்தகம் மூன்று அத்தியாயங்கள் கொண்டது.**

1. **விளக்கம்**
2. **வழிமுறை**
3. **உப வழிமுறை**

பாரபட்சமின்றி, இந்தக் கருத்துகளை மனதில் கொண்டு நடைமுறை படுத்துவீர்களேயானால், இவ் வுலகம் நலம் பெறும்.

## பசு - செல்வம் - விளக்கம்

**பசு - விவசாயம் முதலியவைகளைப் பாது காக்கும் சபை.**

இந்தச் சபை **"கோக்ருஷ்யாதி ரக்ஷிணி"** என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில், பசு முதலிய பிராணிகளைக் காப்பதாலும், விவசாயம் முதலிய தொழில்களைப் பாதுகாப்பதாலும், அவை வளர்ச்சி அடைந்து மனித குலத்துக்கும், மற்றப் பிராணி

களுக்கும் எல்லா நன்மையும் கிடைக்கும். அப்படி யில்லை எனில். எவ்வுயிர்க்கும் எந்த நன்மையும் கிடைக்காமல் போய்விடும்.

**சர்வ சக்திமான் ஜெகதீஸ்வரர்:** இந்த ஸ்ருஷ்டி யில் எந்த எந்தப் பொருளை எல்லாம் படைத் துள்ளாரோ அவை அனைத்தும் பல விதத்தில் உபயோகம் உள்ளவை. அவைகளில் இருந்து, அந்தப் பயனை மட்டுமே அடைய முயற்சிக்க வேண்டும்.

அதுவே நியாயமும்கூட. கண்கள் பார்ப்பதற்காக நாம் பெற்றிருக்கிறோம். அதன் பயனை முழுவதுமாக அடையாமல், அதைக் குருடாக்கிக் கொள்வது முறையாகாது. எந்த எந்தப் பொருளை எந்த எந்த உபயோகத்திற்காக இறைவன் படைத்தானோ, அந்த அந்தப் பொருளில் இருந்து, அந்த அந்தப் பயனை மட்டுமே பெற வேண்டும்.

**அதை விடுத்து, முதலிலேயே அந்தப் பொருளை அழித்துவிடுவது, ஆன்றோர்க்கு அழகல்லவே?** பக்ஷ பாதமின்றிச் சிந்தித்துப் பார்ப்பீர்களேயானால் தெரி யும். அதாவது பசு, விவசாயம் முதலியவை காக்கப் படுவதால், அனைத்துயிர்களுக்கும் நன்மை உண்டாகும் அல்லவா? இரண்டும் இரண்டும் நான்கு என்பதை எப்படி நல் அறிவால் அறிகிறோமோ, அதைப் போல. மெய்யறிவின்றி நன்மைகளை அறிய முடியுமோ? இரண்டும் இரண்டும் நான்கு என்பதைப் போல மெய்யறிவால் செய்யப்படும் நற்செயல் களால், நன்மையே விளையும்.

ஒரு பசு குறைந்த பக்ஷம் **இரண்டு சேர்** பால் கொடுக்கிறது. என்றால், மற்றொன்று **20 சேர் பால்**

கொடுக்கிறது. ஆக சராசரியாக ஒரு பசு 11 **சேர் பால்** கொடுக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை. இந்தக் கணக்குப்படி - மாதத்தில் ஒரு பசு 8 1/4 **மனு பால்** கொடுக்கிறது. ஒரு **பசு குறைந்தது 6 மாதம்** பால் கொடுக்கிறது எனில், **ஒரு பசு 18 மாதத்திற்குப் பால் கொடுக்கிறது.** ஆக சராசரி **ஒரு பசு 12 மாதம் பால் கொடுக்கிறது.** இந்த விதமாக 12 **மாதத்தில் ஒரு பசு - 99 மனு பால் கொடுக்கிறது.**

இவ்வளவு பாலில் ஆறில் ஒரு பங்கு அரிசியும். ஆறில் ஒரு பங்கு சர்க்கரையும் சேர்த்து, கீர் செய்து சாப்பிடுவோமேயானால், ஒரு மனிதனுக்கு, இரண்டு சேர் பாலில் செய்த கீர் போதுமான நிறைவைத் தருகிறது. ஏனெனில் இதுவும் ஒரு நடுத்தர விகிதாச் சாரமே! அதாவது ஒரு மனிதன் இரண்டு சேர் அளவு கீர் சாப்பிடுவானெனில், இன்னொருவன் மிகக் குறைவு. இந்தக் கணக்குப் படி **ஒரு பசுவின் பாலில் இருந்து 1980 பேர் ஒரு வேளை திருப்தியான உணவு உண்கிறார்கள்.**

பசு குறைந்தது **8லிருந்து** 16 **முறை கன்று ஈனுகிறது.** சராசரியாக 13 **முறை கன்று ஈனுகிறது.** ஆக ஒரு பசுவின் வாழ்நாளில் கிடைக்கும் பாலை மட்டுமே **25,740** மனிதர்கள் ஒரு வேளை உணவாகப் பெற்று திருப்தியடைகிறார்கள்.

ஒரு பசுவினுடைய பரம்பரையில் **ஆறு பெண் கன்றுகளும், ஏழு ஆண் கன்றுகளும்** உண்டாகின்றன. இவைகளில் ஒன்று ஏதோ ஒரு காரணத்தால் அல்லது நோயின் காரணமாக இறந்துவிடுவதாக வைத்துக் கொண்டாலும் மீதம் 12 **கன்றுகள்** இருக்கும். அவைகளின் அந்த 6 **பெண் கன்றுகள்** மட்டும்,

மேற்சொன்ன கணக்குப்படி 1,54,440 மனிதர்களுக்கு உணவாகப் பால் தருகிறது.

இப்பொழுது அந்த **ஆறு கன்றுகள்** (எருதுகள்) அவற்றில் ஒரு ஜோடி எருதின் மூலமாக 200 **மனு** உணவுப்பொருள் உற்பத்தி செய்ய முடியும். இந்த விதமாக **மூன்று ஜோடி எருதின்** மூலமாக 600 **மனு** உணவுப் பொருள் உற்பத்தி செய்ய முடியும். மேலும் அந்த **எருதுகள் எட்டு ஆண்டுகள்** நன்கு உழைக்கக் கூடியவை.

மூன்று ஜோடிகளும் தங்கள் வாழ்வில் அதாவது எட்டு ஆண்டுகளில் **4,800 மனு** உணவுப்பொருளை உற்பத்தி செய்யக்கூடிய சக்தி உள்ளவை. இந்த **4,800 மனு** உணவுப்பொருளிலிருந்து ஒரு மனிதனுக்கு மூன்று கால் பங்கு உணவு எனக் கணக்கிட்டால், **2,56,000 இரண்டு லட்சத்து, ஐம்பத்தாராயிரம்** மனிதர்களுக்கு ஒரு முறை உணவாகிறது.

பால் மற்றும் உணவு இவைகளைச் சேர்த்துக் கணக்கிடும் போது நிச்சயமாக 4,10,440 **நான்கு லட்சத்து, பத்தாயிரத்து நானூற்று நாற்பது.** மனிதர்களுக்கு ஒரு முறை உணவளிக்க முடிகிறது. இப்படியாக ஆறு பசுக்களின் பரம்பரையையும், அவற்றின் பரம்பரையையும், கணக்கிடும் போது எண்ணற்ற மக்களுக்கு உணவு கிடைக்கிறது. ஆனால் **இந்தப் பசுவின் மாமிசத்தை உண்பதால் 80 பேர் மட்டுமே திருப்தி அடைய முடியும்.**

***சிறு லாபத்திற்கு லட்சக்கணக்கான பிராணிகளைக் கொன்று, எண்ணற்ற மனிதர்களுக்கு நஷ்டத்தை உண்டாக்குவது, பெரிய பாபம் இல்லையா?*** இருந்த போதிலும். பசுக்களின் பாலைவிட எருமைகளின்

பாலினாலும், எருதைவிட எருமைகடா (ஆண் எருமை)வினாலும் சிறிது அதிக லாபம் இருக்கிறது.

ஆனால், பசுவின் பாலைப் போல எருமையின் பாலோ, எருதைப் போல எருமைக் கடாவினால், மனிதர்களுக்கு பயன் அதிகம் இல்லை. பசு, எருது இவைகளின் மூலம் பெறும் பயன் மனிதனுக்கு அறிவையும், ஆரோக்கியத்தையும் அளிக்கிறது. ஆனால் எருமை, எருமைக் கடா மூலம் அவ்வளவு பயன் இல்லை. ஆகவே, ஆரியர்கள் பசுவையே மிக உயர்ந்ததாகக் கருதினார்கள்.

மேலும், ஒட்டகம், பசுவைவிட எருமையைவிட பால் அதிகம் கொடுத்தாலும், பசுவின் பாலின் பலன் அதில் மனிதனுக்குக் கிடைப்பதில்லை. ஒட்டகங்கள் சுமைகளைச் சுமப்பதற்கே சிறந்தவை.

இப்பொழுது ஆட்டிற்கு வருவோம். **ஓர் ஆடு குறைந்தது 1 சேர் பாலும், அதிக பட்சம் 5 சேர் பாலும் கொடுக்கிறது.** சராசரியாக ஓர் ஆடு மூன்று சேர் பால் கொடுக்கிறது. சில குறைந்தது, மூன்று மாதம் பால் கொடுக்கின்றன. சில ஐந்து மாதம் பால் கொடுக்கின்றன. சராசரியாக ஆடுகள் நான்கு மாதம் பால் கொடுக்கின்றன.

மாதத்தில் **ஓர் ஆடு 2 1/4 மனு பாலும், நான்கு மாதத்தில் 9 மனு பாலும்** கொடுக்கிறது. மேற்படி கணக்கீட்டால் ஓர் ஆட்டின் பாலில் 180 **மனிதர்களுக்கு** ஒரு வேளை உணவு கிடைக்கிறது. ஓர் ஆடு ஆண்டுக்கு இருமுறை குட்டி ஈனுகிறது.

இந்த விதமாக ஓர் ஆட்டின் பாலினால் மட்டும், ஆண்டுக்கு 360 **மனிதர்களுக்கு ஒரு வேளை உணவு தருகிறது.** சில ஆடுகள் நான்கு ஆண்டுகளும், சில

எட்டு ஆண்டுகளும் குட்டிகளை ஈனுகின்றன. ஆக ஜன்மம் முழுவதும் 2,160 மனிதர்களுக்கு ஒரு வேளை உணவு கிடைக்கிறது.

அதன் குட்டிகளைக் கணக்கிடும் போது 24 **ஆகிறது.** ஏனெனில் சில ஆடுகள் குறைந்த பட்சம், சில ஆடுகள் அதிக பட்சம் **மூன்று குட்டிகள் ஈனுகின்றன.** மொத்தத்தில் **இரண்டு குட்டிகள் இறந்து விடுகின்றன** என்று வைத்துக்கொண்டாலும், 22 குட்டிகள் இவைகளில் **11 பெண் ஆடுகள்,** பாலினால் மட்டும். **25,920 இருபத்தி ஐந்தாயிரத்து தொள்ளா யிரத்து இருபது** மனிதர்களுக்கு ஒரு நாள் உணவு தருகின்றன.

அவைகளின் பரம்பரையைக்கொண்டு, கணக் கிடும்போது, கணக்கற்ற மனிதர்களுக்கு உணவு கிடைக்கிறது. மேலும் ஆண் ஆடுகள் (ஆட்டுக்கடா) சுமைகளைச் சுமக்கப் பயன்படுகின்றன. வெள்ளாடு, செம்மறியாடுகளின் முடிகளில் இருந்து தயாரிக்கப் படும் கம்பளி ஆடைகளினால், மனிதர்களுக்கு நல்ல பயன் உண்டாகிறது.

செம்மறியாட்டுப் பால், வெள்ளாட்டுப்பாலை விட குறைவாக இருந்தாலும், வெள்ளாட்டுப் பாலில் நல்ல பலமும். நல்ல நெய்யும் கிடைக்கின்றன. இதே போல் மற்ற பால் தரும் பிராணிகளின் மூலமும் நல்ல லாபமும், சுகமும் கிடைக்கின்றன.

எப்படி ஒட்டகம், யானை, குதிரை இவைகளின் மூலம் நல்ல பயன் கிடைக்கின்றனவோ, அதே போலப் பன்றி, நாய். கோழி, சேவல், மற்றும் மயில் முதலிய பறவைகளின் மூலமும் பல விதத்தில் பயன் உண்டாகிறது.

மனிதர்கள் விரும்பினால் மான், சிங்கம் மற்றும் மயில் முதலியவைகளிடமிருந்தும் பயன் பெற முடியும். ஆனால் இவைகளின் பராமரிப்பிற்குத் தகுந்தபடிதான் பலனும் நமக்குக் கிடைக்கும். நிகழ் காலத்தில் பரோபகாரம் என்பது, பசுவை ரக்ஷிப்பதே.

இதனால் இரண்டு விதத்திலும் பிராணிகளின் பாதுகாப்பும், வாழ்க்கை, சுகம், கல்வி, பலம், மேலும் புருசார்த்தமும்கூட வளர்கிறது.

## 1. உணவு = 2. நற்செல்வம்

இதில் முதலாவது இல்லையெனில், பிராணி களின் அழிவும், இரண்டாவது இல்லை எனில், பல விதத்தில் துன்பமும் உண்டாகிறது.

பாருங்கள், காரமற்ற புல், பூண்டு, இலை, தழை, காய், மலர் இவைகளைத் தின்று பால் என்ற அமுதத்தைத் தருகிறது. மேலும், காளைகளோ கலப்பை, வண்டி முதலியவைகளை இழுத்து. உணவுப் பொருளை உற்பத்தி செய்கின்றன. மேலும் புத்தி, பலம், பராக்கிரமம், பெருகவும், நோய், நொடி இன்றி வாழவும் உதவுவதோடு மகனாக, மகளாக, நண்பனாக மனிதர்களிடம் நம்பிக்கையும், அன்பும் வைத்திருக்கின்றன.

அவைகளை எங்கே கட்டுகிறார்களோ, அங்கே கட்டுண்டுக் கிடக்கின்றன எங்கே ஓட்டிச் செல்கிறார்களோ அங்கே செல்வது, அழைக்கப்படும் பொழுது அருகில் வருவதும், எப்பொழுதும் காட்டில்

உள்ள பல மிருகங்களால் ஆபத்து உண்டாகின்றனவோ அப்பொழுது வளர்ப்பவர்களிடம் தங்களைக் காப்பாற்றுவார்கள் என்று நம்பிக்கையுடன் ஓடி வருகின்றன.

இவைகள் இறந்த பிறகும்கூட அவற்றின் தோல்கள் மனிதர்களைப் பல விதங்களில் காக்கின்றன. காடுகளில் மேய்ந்தாலும். தமது கன்றுகளுக்கும் எஜமானுக்கும், பால் தருவதற்குக் குறித்த இடத்திற்கு தாமாகச் செல்கின்றன. தம் எஜமானுக்காகத் தம்மையே தியாகமாகத் தருகின்றன. **இப்படியாக மன்னனுக்கும் மக்களுக்கும், நன்மையே செய்கின்ற சுப குணங்களையே கொண்ட சுகம் தரும் பிராணிகளின் கழுத்தைக் கத்திகளால் வெட்டி தன் வயிற்றை நிரப்பிக்கொள்வது பாவம் அல்லவா?**

உலகிற்கு நஷ்டத்தை உண்டாக்கும் இப்படிப் பட்டவர்களைவிட, நம்பிக்கைத் துரோகிகள், துன்பம் தரும் பாவிகள் வேறு யாரேனும் இருக்க முடியுமா?

ஆகவே, **யஜுர் வேதத்தினுடைய மந்திரத்தில்** இறைவனின் கட்டளை கீழ்க் கண்டவாறு கூறப் பட்டுள்ளது.

“அத்ந்யா : யஜமானஸ்ய பசூன் பாஹி”

**ஹே மனிதா! நீ இந்தப் பிராணிகளை ஒரு பொழுதும் கொல்லாதே, யஜமானாக இருந்து அவைகளை நீ காப்பாற்றினால் அவைகளால் உனக்கும் நன்மை உண்டாகும்.**

ஆகவே. பிரம்மாவிலிருந்து, ஆரியர்கள் வரைக்கும், பசுவை (பிராணிகளை) வதைப்பதைப் பாவம்

என்றும், அதர்மம் என்றும் நினைத்தனர். இந்தப் பிராணிகளைக் காப்பதால், உணவுப்பொருள்கள் பற்றாக்குறை உண்டாவதில்லை. ஏனெனில் பால் போன்றவை, மிக ஏழைகளுக்குகூட உணவுப் பொருள்களோடு கிடைப்பதால், உணவு குறைவாக உண்ணப்படுகிறது.

உணவுப்பொருள்கள் குறைவாகச் சாப்பிடுவதால் மலம் போன்ற கழிவு குறைவாக வெளியேற்றப் படுகிறது. மலம் குறைவாக வெளியேற்றப்படுவதால், துர்நாற்றம்கூட குறைகிறது. துர்நாற்றம் குறைவதால் வாயு, மழை நீர் போன்றவை, தூய்மை கெடுவ தில்லை. அதனால் மனிதர்களுக்கு நோய் வருவ தில்லை; சுகம் அதிகமாகக் கிடைக்கிறது.

(பிராணிகளின்) பசுக்களின் அழிவால் மன்னன், மக்கள் அனைவரும் அழிவார்கள். இதுவும் உண்மையே. பசுக்களின் குறைவால், பால் முதலி யவை குறைவாகக் கிடைக்கின்றன மேலும், விவசாயம் முதலியவை தடைபடுகிறது. (குறைகிறது) 700 ஆண்டுகளுக்கு முன் கிடைத்ததைப் போல், பால், நெய் போன்றவை, இப்பொழுது மிகக் குறைந்த விலையில் கிடைப்பதில்லை.

ஏனெனில் 700 **ஆண்டுகளுக்கு** முன்தான் இங்கு வந்து புலால் உண்ணும் வெளி நாட்டினர் பாரதத்தில் குடியேறினார்கள். அவர்கள் எல்லோருக் கும் உதவிடும் பசுக்களின் மாமிசத்தையும்கூட விட்டு வைக்கவில்லை.

“நஷ்ட மூலே கைவ பத்ரம் ந புஷ்பம்”

காரணம் : அழிக்கப்படும் போது காரியமும் அழிகிறதல்லவா?

"ஹே புலால் உண்பவரே! நீங்கள் சில காலத்திற்குப் பிறகு உண்பதற்குப் பசுக்களின் மாமிசம் கிடைக்கவில்லை எனில், அப்பொழுது மனிதனையும் கொன்று தின்றுவிடுவீர்கள் இல்லையா?"

ஹே பரமேஸ்வரா! நீ ஏன் இந்தக் குற்றமற்ற பசுக்கள் கொல்லப்படும்போது, கருணை காட்டுவது இல்லை?

அவைகளுக்கு உன் அருள் இல்லையோ?

அவைகளுக்கு உன் நீதி மன்றத்தில் நீதி கிடைக்காதா?

அவைகளின் துன்பத்தைப் போக்க மாட்டாயோ?

அவைகள் உன்னை அழைப்பது கேட்கவில்லையோ?

அந்தப் புலால் உண்பவர்கள்மீது, கருணை காட்டி அவர்களிடம் இருக்கும் சுயநலம், பொறாமை, முட்டாள்தனம், கொடூர குணம் இவைகளைப் போக்கி, அதன் மூலம் அவர்கள் தீயச் செயல்கள் செய்வதிலிருந்து விலகி வாழச் செய்.

**விளக்கம் :** ஹிம்சாவாதி - அஹிம்சாவாதி இருவருக்கும் இடையே சிறு வாதம்.

**ஹிம்சா :** இறைவன் அனைத்துயிர்களையும், மனிதனுக்காகப் படைத்தான். மனிதனைத் தன்னை வழிபடப் (பக்தி செலுத்த) படைத்தான். ஆகவே, மாமிசம் சாப்பிடுவது ஒன்றும் குற்றம் இல்லையே?

**அஹிம்சா :** சகோதரா, நீ கூறுகிறாய். பிராணிகள், மனிதன் சாப்பிடவே படைக்கப்பட்டன என்று. "உன் சரீரத்தைப் படைத்த இறைவன்தான், பசு முதலான பிராணிகளையும் படைத்தான். நீ எப்படி அவைகளின் மாமிசத்தை விரும்புகிறாயோ, அதைப் போலவே" அந்தப் பிராணிகள் மனித மாமிசத்தை விரும்புகின்றன. அதாவது சிங்கம், புலி முதலான பிராணிகளுக்காகத்தான் நீ படைக்கப்பட்டாய் என்று கூறுகிறேன்.

**ஹிம்சா :** இறைவன் மாமிசம் உண்ணும் பிராணி களுக்கு எப்படி உண்மையானப் பற்களைக் கொடுத்து உள்ளானோ அப்படியே மனிதனுக்குக் கொடுத் துள்ளான். ஆகவே, மனிதனும் மாமிசம் உண்பது சரியானதே! (தவறு இல்லை).

**அஹிம்சா :** புலி, சிங்கம் முதலான பிராணிகளின் பற்களோடு உன் பற்களை ஒப்பிடுகிறாயோ, நீயும் விலங்கும் ஒன்றா? நீ மனித இனம். அவைகள் விலங்கு இனம். உனக்கு இரண்டு கால்கள், பிராணி களுக்கு நான்கு கால்கள். நீ கற்று, தெளிந்து, நன்மை, தீமை உணரக் கூடியவன். அவைகள் அப்படி அல்ல. உனது பேச்சும் சரியானது அல்ல. அதாவது குரங்கை எடுத்துக்கொள். அதற்கும் சிங்கம், பூனை போன்று பற்கள் கூர்மையாக இருக்கின்றன. ஆனால், குரங்குகள் மாமிசம் உண்பதில்லையே! அதோடு மட்டுமல்ல மற்ற விலங்கினத்தோடு ஒப்பிடுவதை விட குரங்கோடு மனிதனை ஒப்பிட்டுப் பார்த்தால், மிகவும் அதிகமான பொருத்தங்கள் இருக்கின்றன. ஆக குரங்கு எப்படி எப்பொழுதும் மாமிசம்

உண்பதில்லையோ, பழ வகைகளையும் காய்கறிகளையும் தின்று உடல் வளர்க்கிறதோ, அப்படியே மனிதனும் வாழ வேண்டும் என்று (இறைவன் கூறுவதாக) நீ எடுத்துக் கொள்.

**ஹிம்சா** : மாமிசம் உண்பவர்கள் மிக பலம் பெற்றவர்களாக இருக்கின்றனர். சைவ சாப்பாட்டினால் (காய்கறிகள் உண்பதில்) பலஹீனமே உண்டாகிறது. ஆகவே, பலம் கிடைக்க மாமிசம் உண்ண வேண்டும்.

**அஹிம்சா** : சின்ன சாதாரண விஷயம், இதை ஒப்புக்கொள்கிறாய். ஆனால், சிந்திப்பதில்லை. சிங்கம் மாமிசம் உண்ணுகிறது. ஆனால், காட்டுப் பன்றியோ அல்லது காட்டு எருமையோ மாமிசம் எப்பொழுதும் சாப்பிடுவதில்லை. சிங்கம் மனிதக் கூட்டத்தில் புகுந்தால் மனிதனை தான் அடித்துச் சாப்பிடும். ஆனால், சிங்கத்தைத் துப்பாக்கியாலோ, கத்தியாலோ (தான்) கொலை செய்துவிட முடிகிறது.

அதே சமயம், காட்டு எருமையோ, காட்டுப் பன்றியோ, எந்தப் பிராணிகளின் கூட்டத்தில் புகுந்தாலும் சரி அல்லது மனிதனேயானாலும் தப்பித்து ஓட முயற்சிக்கின்றன. கத்தியினாலோ, துப்பாக்கியினாலோ எளிதில் கொல்லவும் முடிவதில்லை. சிங்கமும் அவைகளைக் கண்டு பயப்படுகின்றன. ஆனால், அவைகள் சிங்கத்திடம் எப்பொழுதும் பயப்படுவதில்லை.

மேலும் நேராகப் பார்க்க விரும்பினால், ஒரு மாமிசம் உண்பவன் பால், நெய், அன்னம் முதலியன உண்ணும் மதுராவைச் சேர்ந்த ஒரு மல்யுத்த

வீரனுடன் யுத்தம் செய்தால், நிச்சயமாக மல்யுத்த வீரன் அந்த மாமிசம் உண்பவனை வென்றுவிடுவான். இதில் சந்தேகமே இல்லை. பிறகு தேர்வு செய்வார்கள். எதை எதை உண்பதால், பலம் உண்டாகும் என்று.

நீயே எண்ணிப் பார்! பழங்களின் தோல்களைச் சாப்பிடுவதால், பலம் உண்டாகுமா? அல்லது பழத்தின் சாறை (ரசத்தை) அருந்துவதால் பலம் உண்டாகுமா? தாவர உணவு பழச்சாறு போன்றது. மாமிசம் பழங்களின் தோலுக்குச் சமம்.

மேலும், முறையோடு காய்கறிகள், கீரைகள், சாப்பிட்டு வந்தால், மாமிசம் உண்பதைவிட பல மடங்கு பலம் கிட்டும். அதோடு மாமிசம் உண்பதால், பல தீமைகள், நோய்கள் விளைகின்றன. மாமிசம் உண்பது பாவச் செயல், அதர்மம், அநீதியும்கூட.

**ஹிம்சா :** சில நாடுகளில் மாமிசத்தைத் தவிர உண்பதற்கு, வேறு எதுவும் கிடைப்பதில்லை. அப்படிப் பட்ட இடங்களில் மாமிசம் உண்பது ஆபத்துக் காலத்தில் அதாவது, வேறு வழியே இல்லாத போது, மாமிசம் உண்பது சில நோய்களைக் குணப்படுத்துவதற்கு மாமிசம் உண்பது போன்றவை தவறு ஆகாதே?

**அஹிம்சா :** நீ சொல்வது முற்றிலும் தவறு. ஏனெனில் மனிதன் எங்கு வசிக்கிறானோ அங்கு (பூமி) இயற்கைத் தாவரங்கள், பழங்கள் அவசியம் உண்டு. விவசாயமோ அல்லது காய்கறிகள், பழங்கள் இல்லாத இடத்தில் மனிதன் அவசியம் வாழ முடியாது.

நல்ல விளைநிலமும், காய்களும். கனிகளும். கிழங்குகளும் இன்னும் பல வகைகளும் இல்லை எனில். மனிதன் வாழ்வது மிகக் கடினமே. பச்சைக் காய்கறிகள், கனிகள் உண்பவர்கள் ஆபத்து காலத்தில். எப்படி தங்களைக் காத்துக்கொள்கிறார்கள்? நோய்களைத் தீர்க்க சில மூலிகை மருந்துகளால் நீக்க முடியும். ஆகவே. மாமிசம் உண்பது நல்லது அல்ல!

**ஹிம்சா :** இறைவன் மிருகங்களையும், பிராணிகளையும் படைத்ததே. மனிதன் உண்பதற்காகத்தான். இல்லை எனில், பூமியில் மிருகங்கள், பிராணிகள் பெருகிவிடாதா?

**அஹிம்சா :** ஆஹா! இந்த எண்ணம் உனக்கு வந்ததே மாமிசம் நீ உண்பதாலோ! என்னவோ! மனித இனம் பெருகிவிட்டதே, என்று யாராவது, மனித மாமிசத்தை உண்கிறார்களா? இல்லையே! மிருகங்கள் அதிகமாகப் படைக்கப்பட்டதன் காரணம், ஒவ்வொரு மனிதனும் வாழப் பல மிருகங்களின் உதவி தேவைப்படுவதால்.

**ஹிம்சா :** நீங்கள் சொன்ன அனைத்தும், பொதுவாக மக்களுக்கு. ஆனால், எங்கள் மதத்தில் மாமிசம் உண்பது அதர்மம் இல்லே! உனக்கு ஒரு வேளை அது பாவமாக இருக்கலாம். உன் மதம் அப்படி. ஆகவே, நீங்கள் சாப்பிடாதீர்கள். நாங்கள் மாமிசம் சாப்பிடுவோம். எங்கள் மதத்தில் மாமிசம் உண்பதால் பாவம் இல்லை.

**அஹிம்சா :** தர்மமும், அதர்மமும் நாம் செய்யும் செயல்களால் உண்டாகிறதா? இல்லை மற்ற

தினாலா? செயலால் இல்லாமல் உன்னால் உணர முடியாது. தர்மம் எது. அதர்மம் எது என்று?

எந்தச் செயல் பிறருக்கு நஷ்டத்தை உண்டாக்கு கிறதோ, அது அதர்மம். எந்தச் செயல் பிறருக்கு நன்மை செய்கிறதோ, அது தர்மம்.

இதை ஏன் ஒப்புக்கொள்ள மறுக்கிறாய்? திருடுவது அதர்மம். ஏனெனில், அச்செயலால், பிறருக்கு நஷ்டம் உண்டாகிறது.

இல்லை எனில், நல்லவனுக்கு உபயோகம் - ஆவதைப் போலத் திருடனுக்கும் செல்வம் உப யோகம் ஆகிறது என்றாகிவிடும். ஆகவே, எந்தச் செயலால் பிறருக்கு நஷ்டமோ. அது அதர்மம் என்றும், பிறருக்குப் பிரதி பலனை எதிர்பாராமல் உதவி செய்வதை, தர்மம் என்றும் சொல்லப்படுகிறது.

திருடுவது பிறருக்கு நஷ்டமும், கஷ்டமும் உண் டாக்குகிறது. அதைப் பாவம் என்று கூறுகிறோம். அப் பொழுது பல வகையில் நன்மை செய்யும் பசுவைக் கொல்வதை ஏன் பாவம் என்று கூறக்கூடாது?

புலால் உண்பவர்களுக்குக் கருணை போன்ற நல்ல குணங்கள் இருப்பதில்லை. மேலும், சுய நலத்திற் காகப் பிறருக்குத் துன்பம் உண்டாக்கவும் இவர்கள் தயங்குவதில்லை. மேலும் தின்று கொழுத்துப் பருமனாக இருக்கும் பசுவைக் கண்டால் புலால் உண்பவன், இந்தப் பசுவின் உடலில் நிறைய மாமிசம் இருக்கும். இதைக் கொன்று தின்றால், நன்றாக இருக்கும் என்று நினைப்பான்.

புலால் உண்ணாதவன் (காய், கனி சாப்பிடு பவன்) பசுவைப் பார்க்கும் போது, பசு நல்ல சுகமாக

வாழ்கிறது என்று நினைப்பான். சிங்கம் எப்படி மற்ற கொழுத்தப் பிராணிகளைச் சுயநலத்துக்காகக் கொன்று தின்று இன்பம் அடைகிறதோ, அதைப் போலத்தான் புலால் உண்பவனும் இன்பம் அடைகிறான். ஆகவே, மாமிசம் உண்பது மனிதனுக்கு நல்லது அல்ல.

**ஹிம்சா :** பசுக்கள் நமக்குப் பயன் தரும் வரை அதன் மாமிசத்தை உண்ணக்கூடாது எனில், அது வயதாகிவிட்டாலோ, அல்லது இறந்துவிட்டாலோ அதன் மாமிசத்தை உண்பதில் தவறில்லையே!

சிறு பருவத்திலிருந்து நம்மைச் சீராட்டி, வளர்த்து, பெரியவர்களாக்கிய, வயதான பெற்றோர்களைக் கொல்வதைப் போன்றது வயதான பசுக்களைக் கொல்வது. மேலும், இறந்த பசுக்களின் மாமிசத்தை உண்பதாலும் அதனால் வரும் பாவத்தின் தண்டனை யிலிருந்து தப்ப முடியாது. ஆகவே, எந்த ஒரு நிலையிலும் மாமிசம் சாப்பிடக்கூடாது.

**ஹிம்சா :** காடுகளில் வாழும் பசு, பட்சிகளினால் யாருக்கும் எந்த லாபமும், பயனும் இல்லை. நஷ்டமே! அவைகளை உண்பது ஒன்றும் தவறு இல்லையே?

**அஹிம்சா :** அவைகளையும் சாப்பிடக்கூடாது. ஏனெனில், அவைகளில் இருந்தும் நன்மைகள் பெற முடியும். அதாவது நூறு தோட்டிகள் எவ்வளவு சுத்தம் செய்கிறார்களோ, அதைவிட அதிகமாக நமக்கு சுத்தமும், சுகாதாரமும் விளைவிக்கும்.

இந்தப் பன்றி, சேவல், மயில், பாம்பு போன்றவை கள் மேலும், எப்படி மனிதர்கள் சாப்பிடும் சாப்பாட் டால். மற்ற ஜீவன்களுக்கு உபகாரம் உண்டாகிறதோ,

அதைப் போல் காட்டில் வாழும் மாமிசாகாரி விலங்குகளுக்கு காட்டுப் பசு பட்சிகள்தான் உணவு.

அறிவினால், நல்ல கருத்துகளைக் கொண்டு, அந்த காட்டு மாமிசாகாரி விலங்குகளிடம் பயன்களைப் பெற முயற்சித்தால், பல விதத்திலும் லாபம் அடைய முடியும், அந்தப் பிராணிகளிடம். ஆகவே, மாமிசம் உண்ணாமல் இருப்பதே மிக நன்று.

நமக்கு உணவாகப் பயன்படும் பாலைத் தரும் பசுக்களையும். பிராணிகளையும் தாய், தந்தைக்குச் சமமாகக் கருத வேண்டாமா? மனிதர்களைவிடப் பசு, பட்சிகள் படைக்கப்பட்டிருப்பது (நமது) நன்மைக்கே.

மனிதர்களுக்குப் பயன்படும் உணவு வகைகளை விட பசு, பட்சிகளுக்கு உணவாகும் தாவரங்கள் இறைவன் அருளால், யாரும் பயிரிடாமலேயே தாமாக உண்டாகின்றன. அவைகளுக்குத் தேவை யான மழையையும் இறைவனே தருகிறான். இவற்றி லிருந்து நாம் அறிகிறோம். பசு, பட்சிகள் இறை வனால் படைக்கப்பட்டிருப்பது காக்கப்படுவதற் காகத்தானே அன்றி, அழிக்கப்படுவதற்காக அல்ல.

**ஹிம்சா :** மனிதன் பசுவைக் கொன்று தின்றால் பாவம். ஆனால், மாமிசம் விற்பவனிடம் வாங்கி உண்பதாலோ அல்லது. **பைரவன் - சாமுண்டி - துர்கா - ஜகையா** வாம மார்க்க (அல்லது) யாகம் போன்ற பூஜையில் இறைவனுக்குச் சமர்ப்பித்து, பின் உண்பதால், பாபம் உண்டாகாது. ஏனெனில், அவை முறையாக பூஜிக்கப்பட்டு உண்ணப்படுகின்றன.

**அஹிம்சா :** மாமிசம் சாப்பிடக்கூடாது. மாமிசம் சாப்பிட உபதேசிக்கவோ, அனுமதிக்கவோ கூடாது. பசுக்களைக் கொல்லவும் கூடாது. பசுவதையால்

ஏற்படும் பாவங்களைத் தடுக்கப் பசுக்களை. கொல்லாமல் விட்டுவிடுங்கள். இதற்கு ஆதாரமாக மனுவின் வாக்கு ஒன்றும் உள்ளது.

**அனுமண்தா - விஸசிதா - நிஹந்தா- க்ரய - விக்ரயி**
**சன்ஸ்கர்த்தா - சோ - பஹர்த்தா - ச -**
**காத கஸ்சேதி காதகா : !!**
**மனு - அ - 5 - ஸ்லோ 5.**

## அர்த்தம்

கொலை செய்யத் தூண்டுபவன். மாமிசம் அறுப்பவன், பசு முதலிய விலங்குகளைக் கொல்பவன். பசுக்களைக் கொல்வதற்காக வாங்குபவன், விற்பவன். மாமிசத்தைச் சமைப்பவன். அதை பரிமாறுபவன், இவர்கள் பாவிகளாகவும், இச்செயல்கள். பாவச் செயல்களாகவும், வர்ணிக்கப்படுகின்றன,

மேலும் பைரவ போன்ற இறைவனின் பெயரில், பசுவதை செய்வது, சாப்பிடுவது, பசுவதைகளைத் தூண்டுவது இவைகள் பாபச் செயல்களாகும். ஆகவே, இறைவன் வேதங்களில் மாமிசம் உண்பது பற்றியோ அல்லது, பசுவதைபற்றியோ எழுதவில்லை.

சாராயம் குடிப்பதுகூட மாமிசம் உண்பதற்கு ஒரு காரணம். ஆகவே, அதைப்பற்றிச் சுருக்கமாகச் சொல்கிறோம்.

## போதையில் உள்ளவன்

மாமிசம் சாப்பிடுவது கெடுதல் என்கிறீர்! மது அருந்துவதனால் குற்றம் ஒன்றும் இல்லையா?

## 21

## அமைதியானவன்

மது அருந்துவதாலும் மாமிசம் உண்பதிலுள்ள விளைவுகள் உண்டு.

மது அருந்துவதால், போதை உண்டாகி போதையின் காரணத்தால் அறிவு இழந்து கடமையை மறந்து தவறான செயல்களைச் செய்கிறார்கள். நீதிக்கு அநீதியையும், அநீதிக்கு நீதியையும் - விபரீதமாகச் செயல்படுகின்றனர்.

மேலும், மது பானங்கள் அழுகிய பொருள்களிலிருந்து தயாரிக்கின்றனர். ஆகையினால், மது அருந்துபவர்கள் மாமிசம் சாப்பிட ஆரம்பித்து விடுகின்றனர். மது அருந்துவதால், ஆத்மா தவறான எண்ணங்களை எண்ண ஆரம்பித்துவிடுகின்றன.

ஆக, மது அருந்துபவன் கல்வி போன்ற சுப குணங்களைவிட்டு விலகி, தவறுக்கு அடிமையாகி தர்ம வழியை மறந்து பசுவதை, புலால் உண்பது, தூக்கம், பயம், காமம் போன்ற தீய குணங்களுக்கு அடிமையாகி, வாழ்க்கையை வீணாக்கிக்கொள்கிறான். ஆகவே, மது போன்ற போதைத் தரும் பொருள்களையும் சாப்பிடக்கூடாது.

கஞ்சா, புகையிலை போன்ற பொருள்களும்கூட போதைப் பொருள்களே. ஆகவே, இவைகளையும் சாப்பிடக்கூடாது. ஏனெனில், இவைகளும் அறிவை அழித்து போதை, சோம்பல், துன்புறுத்தல் போன்ற குணங்களில் மனிதனைத் தள்ளிவிடுகிறது. ஆகவே, மதுவைப் போலவே இவைகளையும் சாப்பிடக் கூடாது.

ஆகவே நல்லவரே! நீங்கள் பசுக்களின் பாது காப்பிற்காக உடல், பொருள், ஆவி அனைத்தையும் தர முன் வரவேண்டாமா? மிகவும் துக்கத்திற்குரிய விஷயம் என்னவெனில் பசு, ஆடு முதலிய விலங்கினங்களையும் கோழி. மயில் போன்ற பறவை இனங்களையும் கொல்வதற்காக, கொடுமைக் காரர்கள்கொண்டு செல்லும்பொழுது, அந்த வாயற்ற ஜீவன்கள் தங்களது பரிதாபமான சோகத்தை வெளிபடுத்தியவாறு நம்மைப் பார்த்துக் கூறுகின்றன.

"நல்லோரே! குற்றமற்ற எங்களை, கொடூரமாகக் கொலை செய்கிறார்கள். ஆனால், நாங்களோ, எங் களைக் காப்பாற்றுபவர்களுக்கும், கொலை செய்பவர் களுக்கும் பால் முதலிய அமிர்தங்களைத் தருவதற் காகவே இருக்கிறோம். மேலும், இறப்பதற்கு விரும்ப வில்லை.

நாங்கள் எங்களிடம் இருப்பவைகளை, மற்றவர் களுக்காகவே அர்ப்பணிக்கிறோம். ஆகவேதான் எங்களைக் காப்பாற்றுங்கள் என்று உங்களை அழைக் கிறோம். எங்களுடைய துன்பத்தை உங்களுடைய மொழியில் புரிய வைக்க இயலாது. உங்களுக்கோ எங்கள் பாஷைத் தெரியாது.

இல்லையெனில், எங்களை யாராவது துன்புறுத் தினாலோ, கொன்றாலோ உங்களிடம் நியாயம் கோரி, அவர்களுக்குத் தண்டனை வாங்கித் தந்து விட மாட்டோமா! நாங்களே மிகக் கஷ்டத்தில் இருக்கிறோம். ஏனெனில் எங்களைக் காப்பாற்றுவதற்கு யாரும் முன் வரவில்லை. அப்படி யாரேனும் முன் வந்தாலும் மாமிசம் உண்பவர்கள் அவர்களிடம், பகை கொள்கிறார்கள்.

மேலும். சுய நலத்திற்காகப் பகை கொள்வதானால் கொள். ஏனெனில். "ஸ்வார்த்தி தோஷம் ந பஷ்யதி". அதாவது சுயநலக்காரன் தன்னுடைய குற்றங்கள் மீது கவனம் செலுத்துவதில்லை. ஆனால், மற்றவர் களுக்கு நஷ்டம் உண்டானால் உண்டாகட்டும். எனக்குச் சுகமே உண்டாகவேண்டும் என்று எண்ணு கிறான். ஆகவே, உதவி செய்வோரே, அப்படிப்பட்ட கஷ்டங்களில்இருக்கும் பசு, பட்சி இனங்களைக் காப்பதற்கு முன் வருவீர்களாக! பூலோகத்தில் இருக்கும் ஒவ்வொரு மனிதனும், இப்படிப்பட்ட நற்காரியங்களைச் செய்ய வேண்டும்.

அதாவது, ஆரியர்கள் எப்படி அக்காலத்தி லிருந்து இக்காலம் வரை வேதத்திற்கு அனுசரனை யாக புகழதக்க செயல்களைச் செய்து வந்தார்களோ, அப்படிப்பட்ட செயல்களைச் செய்ய வேண்டும். இறைவனின் படைப்பை அனுசரித்து, எவனொருவன் பரோபகாரத்திற்காக, தன்னுடைய-உடல்-பொருள்-ஆவி அனைத்தையும், தியாகம் செய்கிறானோ, அப்படிப்பட்ட ஆர்யவர்த்தத்தைச் (பாரதம்) சேர்ந்த ஆரியர்களுக்கு நன்றி மற்றும் புகழ் உண்டாகட்டும் அக்காலத்தில் ராஜா, மஹாராஜா, செல்வந்தர் போன்றவர்கள் பசு, பட்சிகளைக் காப்பாற்றி அவை களின் மூலமாக பால் முதலிய உணவுப் பதார்த்தங் களைப் பெற்று அவைகளை உண்டு ஆரோக்கியம், புத்தி, பலம், பராக்கிரமம் முதலிய நற்குணங்களைப் பெற்று வாழ்வதற்காகப் பூமியில் அதிகமான இடங் களில் காடுகளை வளர்க்க முற்பட்டார்கள்.

மேலும், மரங்கள் அதிகமாக வளர்க்கப்படுவதால், மழை பொழிவதற்கு ஏதுவாகிறது. காற்றுத் தூய்மை யாகிறது. பசுக்களும், பட்சிகளும் அதிகமாக

வளர்க்கப்படுவதால், இயற்கை உரங்கள் அதிகமாகக் கிடைக்கின்றன. ஆனால். இப்பொழுது மனிதர்கள் அதற்கு மாறாக நடக்கிறார்கள். அதாவது காடுகளை அழிப்பது. பசு. பட்சிகளைக் கொல்வது, கொன்று தின்பது. ரசாயன உரங்களை நிலங்களில் இட்டு, அதன் மூலமாகவும் நோய்களை வளர்ப்பது போன்ற செயல்களால் உலகிற்குத் தீமை விளைவிக்கிறார்கள். மேலும். சுயநலத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தும், பொதுநலத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமலும், எதிர்மறையாகச் செயல்படுகிறார்கள்.

**"விஷாதப்யமிருதம் க்ராஹயம்"**

அதாவது விஷத்திலிருந்தும், அமிர்தத்தை எடுப்பது. நல்லோர்களின் கொள்கை. மேலும், பசு முதலிய விலங்கினங்களின் மாமிசத்தை உண்பதால், ஏற்படும் தீமைகளைத் தவிர்த்து, அவைகளின் பால் முதலிய உணவுப் பொருள்களை உண்பதும் அவர் களுடையக் கொள்கையாகும்.

அது மட்டுமல்லாமல். அவைகளைக் காப்பாற்றி, மக்களுக்கு நன்மை செய்வதும். அவர்களுடைய கொள்கையாகும். இறைவனால் உலகில் படைக்கப் பட்டிருக்கும் அனைத்துப் பொருள்களும், மற்றவர் நன்மைக்காகவே இருக்கின்றன. அதைப் போல மானிடராகிய நாமும், நமது உடல்-பொருள்-ஆவி அனைத்தையும் பரோபகாரியத்திற்காக தியாகம், செய்யலாமே? மேலும், பசு போன்ற விலங்கினங் களைக் கொடுமைப்படுத்துவது முறையாகுமா? மிகவும் ஆச்சரியத்திற்குரிய விஷயம் என்னவெனில், பசுவதைச் தடைச் சட்டம் என்று சட்டப் புத்தகத்தில் எழுதி வைத்திருக்கின்றோம்.

பலஹீனமான விலங்கினங்களுக்கு அவைகளால் சுமக்க முடியாத அளவுக்குச் சுமைகளை ஏற்றக்கூடாது என்றும் சட்டம் இயற்றி வைத்திருக்கின்றோம். ஸ்ரீமதி ராஜராஜேஸ்வரி, ஸ்ரீவிக்டோரியா மகாராணியின் கருத்து, தூக்குத் தண்டனையைவிட சிறைத் தண்டனை அதிகத் துன்பம் தருவதாகும். ஆனாலும், ஒரு குற்றவாளி சிறைத் தண்டனை வேண்டுமா அல்லது தூக்கு தண்டனை வேண்டுமா என்று கேட்கும் பொழுது, அவன் தெளிவாகக் கூறுவான்.

"எனக்கு மரண தண்டனை வேண்டாம், சிறை தண்டனைதான் வேண்டும்" என்று. அது போல உயிரினங்களைக் கொல்வதும் பாவம். அதைவிட அவைகளை இம்சிப்பதோ மிகவும் பாவச் செய லாகும்.

எப்படி ஒரு மனிதன் சாப்பிடுவதற்குத் தயாராக இருக்கும்போது, சாப்பிடுவதைப் பறித்தாலோ அல்லது தடுத்தாலோ அவன் துன்பம் கொள் கிறானோ, அதே நிலைதான் மற்ற உயிரினங் களுக்கும். ஆனால், நமது நாட்டிலோ, அரசுக்குச் சொந்தமான காடுகளில் புல், இலை, தழை போன்ற தங்களுக்கு உணவாகிய பொருள்களைச் சாப்பிட பசு இனங்கள் சென்றாலோ அல்லது சாப்பிட்டாலோ, அந்தப் பசுவினங்களுக்கும், அவைகளை வளர்ப்பவர் களுக்கும் தண்டனை கொடுக்கப்படுகிறது.

காடுகள் தீப்பற்றி அழிந்தாலும் பரவாயில்லை. ஆனால், பசு இனங்கள் சாப்பிடக்கூடாது என்கிறார்கள். ஆனால் நாமோ, ஒரு ராஜாவிடமோ அல்லது பெரிய மனிதனிடமோ, ஒரு குற்றவாளி செல்லும் போது, அவனுக்கு உணவு கொடுக்கப்பட

வில்லையென்றால், அவனுக்குத் துன்பம் உண்டாகாதா என்கிறோம். அப்படித்தானே நாம் பசு இனங்கள் மேல் கருணை காட்ட வேண்டும்.

கவனமாகக் கேளுங்கள்! நமக்கு எப்படி இன்ப-துன்பம் வரும்போது பதறுகிறோமோ, அதுபோலத்தான் மற்றவர்களுக்கும் என்று உணர வேண்டும். பசு முதலிய உயிரினங்களாலும், அவை வளர்ப்பவர்களாலும் விவசாயத்திற்கு உதவிடும் பசுவினங்களாலும், மக்களின் நல்ல செயல்களாலும் மன்னனின் செல்வம் உயர்கிறது.

மன்னன் பசுவினங்களைக் காப்பதற்காகவும், தம் மக்களைக் காப்பாற்றுவதற்காகத்தான் வரி வசூலிக்கிறான். அவைகளை அழிப்பதற்கு அல்ல. ஆகவே, இன்றுவரை நடந்தது நடந்தவையாக இருக்கட்டும். இனிமேலாவது, பிறருக்குத் தீமை தரும் செயல்களை விடுத்து, நன்மையே செய்வோமாக.

நன்மை, தீமைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்வோமாக. நடுநிலையாக நின்று அனைத்து உயிர்களுக்கும் நன்மை தரும் செயல்களைச் செய்வோமாக! பிறருக்குத் தீமை தரும் செயல்களை விடுத்து, நன்மை தரும் செயல்களைச் செய்து, நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்கு, இறைவன் அருள் செய்யட்டும். ஆதரவற்ற உயிரினங்களைக் காப்பீர்களாக! இந்த விஷயத்தை வீண் என்று விட்டுவிடாமல் செயல்படுத்துவீர்களாக!

***சர்வ வல்லமை படைத்த இறைவா!***

***இந்த உயிரினங்களை எவரும் காக்கவில்லையெனில், நீயாவது காப்பாற்று! அல்லது அவைகளைக் காக்கும் வல்லமையை எங்களுக்குக் கொடு.***